**CC.No**. 122/2024

**Date**: 15.05.2026

எ.ம.**சா.** 1. **அகமது சேக் கட்சி, த/பெ. அகமது மைதீன், திருச்சி**

**(சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டது)**

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14.05.2026**

**<u>குறுக்கு விசாரணை</u>**

**1) எனக்கு எதிராக கூறியுள்ள விபரங்கள் எனக்கு நன்கு தெரியும். ம.சா.ஆ.3 ஆவணம் வழக்கறிஞர் அறிவிப்பு நான் பெற்றேனா என்றால் பெற்றேன். ம.சா.ஆ.3 ற்கு பதில்அறிவிப்பு கொடுத்தேனா என்றால் இல்லை. புகார்தாரருக்கு தரவேண்டி சட்டபடியான கடனிற்காகத்தான் வழக்கு காசோலை கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். எதற்காக காசோலை கொடுத்தேன் என்றால் பணியில் சேரும்போது பணி தொடர்பான பரிவர்த்தனைக்காக செக்யூரிட்டிக்காக கையொப்பம் மட்டும் செய்து நிரப்பாமல் காசோலை கொடுத்திருந்தேன். செக்யூரிட்டிக்காக கொடுத்தேன் என்பதற்கு ஏதேனும் ஆவணம் கொடுத்தேனா என்றால் இல்லை. நிறுவனத்தில் என்ன பணி என்றால் உதவி விற்பனை மேலாளர். மேற்படி நிறுவனத்தில் காசாளர் ( பணி உள்ளது என்றால் சரிதான். நான் காசாளர் இல்லை என்றால் சரிதான். பொதுவாக பணி சேரும்போது செக்யூரிட்டிக்காக காசோலை கொடுக்கவேண்டும் என்றால் casher பணிக்காகத்தான் கேட்பார்கள் என்றாலும், எனது பதவிக்காக கேட்கமாட்டார்கள் என்றால் சரியல்ல. எவ்வளவு வருடங்கள் பணி பார்க்கிறேன் என்றால் ஒன்றறை வருடங்களாக பணி செய்கிறேன். நான் எனது முதல் விசாரணையில் 4–5 மாதங்கள் மட்டும்தான் பணி பார்த்தேன் என்று கூறியிருந்தால் அது தவறு என்றால் சரிதான். சுமார் 13 மாதங்கள் பணி பார்த்தேன். 4–5 மாதங்கள் சம்பளம் தரவில்லை.**

**2) நிறுவனத்தில் இருந்து நானாக நின்றேனா அல்லது நிறுவனம் என்னை பணியில் இருந்து நிறுத்தியதா என்றால் நானாக நின்றேன். காசோலை தொடர்பான பரிவர்த்தனைகளின் விரபங்கள் தெரியுமா என்றால் தெரியும். பணியில் சுயமாக நான் நின்றபின்பு எனது காசோலையை நிறுவனத்தில் இருந்து திருப்பி கேட்டதற்கு ஏதாவது ஆவணம் உள்ளதா என்றால் இல்லை, வாய்மொழியாக கேட்டேன். காசோலையை**

பெறுவதற்கு காவல் நிலைத்தில் புகார் அளித்தேனா என்றால் இல்லை. புகார்தாரர்தான் 2024ல் நான் பணியில் இருந்து நின்றபோது என் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார், விசாரணையின் போது வழக்கை நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ளும்படி கூறினர். எதற்காக என் மீது புகார் கொடுத்தார் என்றால் கையாடல் செய்த்ததாக பொய்யாக என் மீது புகார் கொடுத்தார். கையாடல் செய்யவில்லை என்று விசாரணையின்போது கூறப்பட்டது. அதற்கு ஆவணம் உள்ளதா என்றால்இல்லை. புகாரை காவலர்கள் எடுத்துக்கொள்ளவில்லை.

3) 2024 ஏப்ரலில் பணியில் இருந்து நின்றுவிட்டேன் என்றால் சரிதான், அதிலிருந்து 10 நாட்கள் கழித்து என் மீது புகார் கொடுத்தார் என்றால் சரிதான். இவ்வளவு பிரச்சனை இருக்கும்போது எதற்காக stop payment வலியுறுத்தவில்லை என்றால் எனக்கு அதைபற்றி அப்போது தெரியவில்லை. நான் பொதுவாக கையொப்பம் கருப்பு நிற மை கொண்ட பேனாவினால் செய்வேனா என்றால்இல்லை எந்த பேனா என்னிடம் உள்ளதோ அதை வைத்து செய்வேன். ம.சா.ஆ.1 வழக்கு காசோலையில் எண்ணால் உள்ள தொகை நான் நிரப்பினேன் என்றால் சரியல்ல. அதை கையெழுத்து நிபுனருக்கு அனுப்ப ஆட்சேபனை உள்ளதா என்றால்இல்லை. வழக்கு காசோலை உண்மையாகவே செக்யூரிட்டிக்காக கொடுத்திருந்தால் அதை வேலையில் இருந்து நின்ற பின்பே பெற்றிருப்பேன் என்றாலும், அதை பெறாததால் நான் கொடுக்கவேண்டிய கடனிற்காகத்தான் புகார்தாரருக்கு காசோலை கொடுத்தேன் என்றாலும் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

VALLIMANALAN S A

Digitally signed by VALLIMANALAN S A
Date: 2026.05.15 15:59:42 +0530

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், காரைக்குடி.